**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 158/2016**

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 24.09.2025 | தகப்பனார் பெயர்: | நாகப்பிள்ளை |
| பெயர்: | கோபாலகிருஷ்ணன் (PW– Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | திருவாலி | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 69/2025 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 24.09.2025</u>**

**(ஆரம்பித்த நேரம்–13.04)**

1. பிரதிவாதி எனது அண்ணன் நாராயணசாமியின் மகன் ஆவார். எனத தகப்பனார் பெயர் நாகப்பபிள்ளை. எனது தந்தைக்கு நாராயணசாமி, கோவிந்தராஜ் மற்றும் என்னையும் சேர்த்து 3 மகன்கள். எங்களுக்கு சகோதரிகள் கிடையாது. நான் முதலில் வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நாளது தேதி வரையில் தாவா சொத்தின் சர்வே எண் தெரியாது என்றால் சரிதான். நான் முதலில் வழக்கு தாக்கல் செய்தது 10 குழி என்றால் சரிதான்.

2. தாவா சொத்து என்பது எங்களது குடும்ப சொத்து ஆகும். தாவா சொத்தை நாங்கள் கரவோலைப்படி பிரித்துக் கொண்டோம் என்று பிராதில் நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதன்படியே வசம் எடுத்துக் கொண்டோம் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த கரவோலையில் யார் கையெழுத்து செய்தார்கள் என்றால் நாராயணசாமி, கோவிந்தராஜ் மற்றும் நான் கையெழுத்து செய்தோம். அந்த கரவோலை இந்த வழக்கில் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான்.

3. அந்த கரவோலையின்படி ஊர் நாட்டாண்மை முன்னிலையில் எங்களுக்குள் சொத்து பிரிக்கப்பட்டது. கரவோலை தற்போது எங்குள்ளது என்றால் தெரியவில்லை. பிராதில் நாராயணசாமி, கோவிந்தராஜ் மற்றும் நான் கரவோலைப்படி சொத்துக்களைப் பிரித்துக் கொண்டோம் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். கரவோலை இருந்ததால்தான் சொத்துக்கள் பிரிக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கரவோலை எழுதியது எனது தந்தையின் இறப்பிற்கு பின்பு சுமார் 7 மாதம் கழித்து இருக்கும்.

4. சொத்துக்கள் பிரிக்கப்பட்டபோது இருந்த பஞ்சாயத்தார்கள் யாரும் தற்போது உயிருடன் இல்லை. எங்களுக்கு பஞ்சாயத்து செய்தவர்கள் யார் என்றால் கோவிந்தராஜ், பக்கிரி ஆவார்கள். கரவோலையில் முதலில் நாராயணசாமியும் அடுத்து கோவிந்தராஜூம் மூன்றாவதாக நானும் கையெழுத்து செய்தோம் என்றால் சரிதான். கரவோலையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் வழக்கிற்கு விரோதமாகிவிடும் என்ற காரணத்தால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து என்பது பூம்புகார் கடற்கரை ஓரம் ஆர்ச்சிக்கு (arch) முன்பு உள்ள சொத்து என்றால் சரிதான்.

5. தாவா சொத்து என்பது அதிலிருந்து கிழக்கு மற்றும் தெற்கு பார்த்த முறையில் உள்ளது என்றால் சரிதான். மொத்த சொத்துக்கள் என்பது 152 குழி ஆகும், அதில் தாவா சொத்து என்பது மொத்தம் 17 ½ குழி ஆகும். மொத்த சொத்தின் நான்கெல்லை என்பது பூம்புகார் to சீர்காழி மெயின்ரோட்டிற்கு வடக்கு, பெட்ரோல் பங்கிற்கு தெற்கு, மீனவர் காலனி செல்லும் பாதைக்கு மேற்கு, சதாசிவம் மனைக்கு கிழக்கு என்றால் சரிதான். தாவா சொத்து என்ன வகைப்பாட்டைச் சார்ந்தது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் தெற்கு–மேற்கில் எனது பூர்வீக ஓட்டு வீடு உள்ளது என்றால் சரிதான்.

6. தென்மேற்கில் உள்ள பூர்வீக ஓட்டு வீடு என்பது 14 குழியாகும், அந்த பூர்வீக ஓட்டு வீடு நாராயணசாமிக்கு ஒதுக்கப்பட்டது. நாராயணசாமிக்கு அடுத்து

கிழக்குப்பக்கத்தில் கோவிந்தராஜூக்கு 8 குழி ஒதுக்கப்பட்டது. கோவிந்தராஜூக்கு ஒதுக்கப்பட்ட 8 குழி நிலத்திற்கு அடுத்து எனக்கு 8 குழி ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு ஒதுக்கப்பட்ட 8 குழிக்கு கிழக்கில் 9 ½ குழி காலியிடமாக இருந்தது என்றால் சரிதான். அந்த இடத்தில் பிரதிவாதி கணேசன் ஆக்கிரமித்து கட்டிடம் கட்டியுள்ளார். இதைத்தான் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் வரைபடம் மூலமாக அ,ஆ,இ,ஈ என காட்டியுள்ளார் என்றால் சரிதான்.

7. நாராயணசாமி, கோவிந்தராஜ் மற்றும் எனக்கு ஒதுக்கப்பட்டது, அதற்கடுத்துள்ள இடம் என்று மொத்தமாக 39 ½ குழி என்றால் சரிதான். தெற்கில் உள்ளதை அடுத்து வடக்கில் உள்ள பகுதியை நான், மற்ற இரு சகோதரர்களும் கிழக்கு– மேற்காக பிரித்துக் கொண்டோம் என்றால் சரிதான். அதில் முதலில் தெற்கில் நாராயணசாமிக்கு 30 குழியும், அதற்கடுத்து வடக்கில் கோவிந்தராஜூக்கு 31 ½ குழியும், அதற்கடுத்து எனக்கு 31 ½ குழியும் கொடுக்கப்பட்டது. அதைத்தான் வரைபடத்தில் உ,ஊ,எ என காட்டியுள்ளார் என்றால் சரிதான்.

8. கரவோலை ஏற்பட்ட சமயத்தில் எனது தகப்பனார் இறக்கவில்லை என்றால் சரியல்ல, இறந்தபிறகுதான் கரவோலை ஏற்பட்டது. மொத்த சொத்தில் தென்கிழக்கில் உள்ள காலிமனையில் எனது தகப்பனார் பெட்டிக்கடை வைத்து நடத்தி வந்தார் என்றால் சரியல்ல. மொத்த சொத்தில் வடக்கில் எனக்கு ஒதுக்கப்பட்ட 31 ½ குழியை சுமார் 40 வருடங்களுக்கு முன்பு நான் விற்றுவிட்டேன் என்றால் சரிதான். நான் விற்றுவிட்டு திருவாலிக்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான்.

9. மொத்த சொத்தில் தெற்குப்பக்கம் எனக்கு ஒதுக்கப்பட்ட 8 குழி பாகத்தில் ஓட்டுக்கட்டிடத்தில் தற்போது ஓட்டல் நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். அந்த ஓட்டலை வாடகைக்கு விட்டுள்ளேன். எனது தகப்பனார் நாகப்பிள்ளை மற்றும் தாயார் கோவிந்தம்மாள் இறக்கும் வரையில்

நாராயணசாமியின் பராமரிப்பி் தான் இருந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. நானும் எனது மற்ற சகோதரரும் எனது பெற்றோர்களை கவனிக்கவில்லை என்றால் சரியல்ல.

10. அதனால்தான் எனது பெற்றோருக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தை நாராயணசாமிக்கு கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. நான் பிராதில் கூறியுள்ளவாறு 17 ½ குழிக்கு ஆவணம் ஏதேனும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 8 குழிக்கு தான் ஆதாரம் உள்ளது, 9 ½ குழிக்கு ஆதாரம் இல்லை என்றால் அந்த 9 ½ குழியில் பிரதிவாதி கட்டிடம் கட்டியுள்ளார். எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட மொத்த சொத்தில் உள்ள தென்மேற்கு மூலையில் உள்ள 9 ½ குழி நாராயணசாமிக்கு கிடைக்கப்பெற்று நாராயணசாமி குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினையின்படி பிரதிவாதி கணேசனுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

11. நான் முதலில் வழக்கு தாக்கல் செய்தபோது பிரதிவாதி தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது என்றுதான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அப்போது அந்த இடம் காலியாக இருந்தது. நான் முதலில் தாக்கல் செய்த வழக்கில் IA. 737/2016 என்ற மனுவில் தற்காலிக உறுத்துக்கட்டளை எனக்கு ஆதரவாக வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதில் உறுத்துக்கட்டளை நிலுவையில் உள்ளபோது பிரதிவாதி கட்டிடம் கட்டியது சம்மந்தமாக நீதிமன்ற அவமதிப்பு மனு IA 859/2017 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

12. அதில் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். IA 859/2017 மனுவின் விசாரணையில் அசல் வழக்கை நான் தாக்கல் செய்வதற்கு முன்னால் எதிர்மனுதாரர் கட்டிடம் கட்டிவிட்டார் என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் மேற்கண்ட இரண்டு IA களும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதனடிப்படையில் நான் வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன் என்று குறிப்பாணை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. அதன்பிறகு நான் 8 குழியல்ல 17 ½ குழிக்கும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

13. எனக்கு கரவோலைப்படி 8 குழி தான் கிடைக்கப்பெற்றது, ஆனால் நான் வழக்கிற்காக கரவோலையை மறைத்து 17 ½ குழி என்று சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சகோதரர் கோவிந்தராஜூக்கு ஒதுக்கப்பட்ட 8 குழியை அவர் விற்பனை செய்துவிட்டார் என்றால் சரிதான்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**(முடிவு நேரம்– 13.55)**